05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# 'ADDIE மாதிரி' வழி இரண்டாம் படிவ மாணவர்களின்

# கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN MENULIS KARANGAN JENIS IMAGINASI DALAM KALANGAN

# PELAJAR TINGKATAN DUA

# MENGGUNAKAN MODEL 'ADDIE'

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**ஹீராஷினி த/பெ இராமன்**

**HEERASHINI A/P RAMAN**

**சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2023**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'ADDIE மாதிரி' வழி இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல்

MENINGKATKAN KEMAHIRAN MENULIS KARANGAN JENIS IMAGINASI DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA MENGGUNAKAN MODEL 'ADDIE'

ஹீராஷினி த/பெ இராமன்

HEERASHINI A/P RAMAN

இந்த ஆய்வு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்தைப் பெருவதற்காகச் சமர்பிக்கப்பட்டது

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA MUDA (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN

தமிழ்மொழி, நவீன மொழித்துறை மொழி தொடர்பியல் புலம்

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

PROGRAM BAHASA TAMIL, JABATAN BAHASA MODERN

FAKULTI BAHASA DAN KOMUNIKASI

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
اونيۏرسيتي ڤنديديقن سلطان ادريس
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

## படைப்புரிமை உறுதிமொழி
## PERAKUAN KEASLIAN PENULISAN

இந்த உறுதிமொழி (15/2/2023) அன்று வழங்கப்பட்டது . Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

### i.மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar):

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக மூன்றாம் படிவம் மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை கட்டுவியக் கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழி தொடர்பியல் புலத்தின் மாணவனாகிய நான் ஹீராஷினி இராமன் (D20191089902) உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

Saya, **HEERASHINI RAMAN (D20191089902)** FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MENULIS KARANGAN JENIS IMAGINASI DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA MENGGUNAKAN TEORI 'ADDIE'** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

______________________________

மாணவர் கையொப்பம் / Tanda tangan pelajar

### ii. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyella):

மூன்றாம் படிவ படிவ மாணவர்களின் பேச்சுத் திறனை இணைக்கற்றல் அணுகுமுறையின் வழி மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு ஹீராஷினி இராமன் (D20191089902) என்ற மாணவரின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், திரு. கிங்ஸ்டன் பால்தம்புராஜ் உறுதிமொழி வழங்குகின்றேன் இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப்பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, **ENCIK. MUNIISWARAN KUMAR** dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MENULIS KARANGAN JENIS IMAGINASI DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA MENGGUNAKAN TEORI 'ADDIE'** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada FAKULTI BAHASA DAN KOMUNIKASI bagi memenuhi sebahagian syarat untuk memperoleh IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.

____________________ ____________________

நாள்/ Tarikh

நெறியாளர் கையொப்பம்/ Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**நன்றியுரை**

வணக்கம். நான் ஹீராஷினி த/பெ இராமன். இவ்வாய்வினை எவ்வித தடங்களுமின்றிச் சிறப்புடன் மேற்கொண்டதற்கு முதலில் எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன். இவ்வாய்வை மேற்கொள்ள அனுமதியளித்த சுல்தான் இட்ரீஸ் கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்மொழிப் பிரிவுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் சமர்பிகின்றேன். இந்த ஆய்வினையைச் சிறந்த முறையில் அமலாக்கம் செய்யவும் அதனைத் திட்டமிட்டப் படி செய்து முடிக்க எனக்குச் சிறந்த ஒரு வழிக்காட்டியாக இருந்து தன்னைச் செதுக்கிய முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ் மற்றும் முனைவர் முனீஸ்வரன் குமார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் துவண்டு விழும் பொழுதெலாம் என் மனதிற்குத் தைரியத்தையும் மனவலிமையையும் ஊட்டிய என் அப்பா இராமன் த/பெ அங்கோ அவர்களுக்கும் என் தாயார் சரஸ்வதி த/பெ சன்யாசி அவர்களுக்கும் மற்றும் என் நண்பர்கள் கோகிலவாணி த/பெ சிவகுமார் அவர்களுக்கும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாய்விற்குத் தரவுகளைத் திரட்ட எனக்கு உறுதுணையாக இருந்த பினாங்கு மாநிலத்திலுள்ள SMK Bayan Lepas எனும் இடைநிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்கும் தமிழ்மொழி ஆசிரியருக்கும் நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன். எனக்குத் தனிப்பட்ட முறையில் இவ்வாய்வினை நன்முறையில் சிறப்பாக மேற்கொள்ள உதவி புரிந்த அனைவருக்கும் இந்நேரத்தில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வானது மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுதுவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதால் அதனைக் களையும் வகையில் ‘ADDIE’ மாதிரியைப் பயன்படுத்தி எழும் சிக்கல்களுக்குத் தீர்வுக் கண்டு மேம்படுத்தவே மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது முக்கிய மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை, இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுத்துத் திறனின் அடைவு நிலையைப் கண்டறிதல், கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனில் எதிர் நோக்கும் பகுப்பாய்தலும் மூன்றாம் நோக்கமாக ADDIE மாதிரி வழி கற்பனைக் கட்டுரையை மேம்படுத்துதலாகும். இவ்வாய்வு பண்புசார் முறையைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு இரண்டாம் படிவ மாணவர்கள் 7 பேர் தரவாளராக உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் ‘ADDIE’ மாதிரியைக் கொண்டு நடத்தப்பட்ட ஐந்து நடவடிக்கைகளில் மூன்று நடவடிக்கைகள் மட்டுமே விளைப்பயனாக அமைந்தது. ‘ADDIE’ மாதிரியைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் சிக்கல்களும் களையப்பட்டது மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களுக்கு ஒரு முறையான கற்பனைக் கட்டுரையை எழுத முடிந்ததோடு இந்த அணுகுமுறையும் மாணவர்களுக்கு ஏற்புடையதாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் அமைந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ABSTRAK

Kajian ini berkaitan kesukaran pelajar dalam menulis karangan jenis imaginasi. Oleh itu, penyelidik telah menjalankan satu kajian bagi mengenal pasti masalah yang dihadapi oleh pelajar dalam kemahiran menulis karangan jenis imaginasi, mengenal pasti punca masalah yang dihadapi oleh pelajar dalam kemahiran menulis karangan jenis imaginasi dan mengenalpasti langkah mengatasi masalah yang dihadapi oleh pelajar dalam kemahiran menulis karangan jenis imaginasi. Teori „MODEL ADDIE" telah digunakan dalam kajian ini. Pengkaji telah menggunakan reka bentuk kajian tinjauan. Kajian ini dijalankan dengan tujuh orang pelajar dari Tingakatn Dua yang mengambil Bahasa Tamil sebagai sampel kajian ini. Data kajian ini dianalisis menggunakan pendekatan kualitatif. Kajian ini telah membantu pelajar dalam meningkatkan kemampuan dalam penulisan karangan jenis imaginasi dengan menggunakan model ADDIE. Oleh itu, penyelidik yakin bahawa kajian ini mampu membatu dalam pengajaran karangan jenis imaginasi. Akhir kata, ini membolehkan pelajar mampu menulis karangan jenis imaginasi dan pendekatan ini juga amat sesuai dan menarik untuk pelajar dalam pembelajaran karangan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்


| | |
|---|---|
| **படைப்புரிமை உறுதிமொழி** | i |
| **நன்றியுரை** | ii |
| **ஆய்வுச் சுருக்கம்** | iii |
| **ABSTRAK** | iv |
| **பொருளடக்கம்** | V |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 3 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 6 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 9 |
| 1.5 ஆய்வு வினா | 9 |
| 1.6 ஆய்வு நன்மை | 10 |
| 1.6.1 ஆசிரியர்கள் | 10 |
| 1.6.2 மாணவர்கள் | 11 |
| 1.6.3 சமுதாயம் | 11 |
| 1.7 ஆய்வு எல்லை | 11 |
| 1.8 ஆய்வு சான்றாதாரம் | 13 |
| 1.9 கலைச்சொற்கள் | 13 |
| 1.9.1 கற்பனைக் கட்டுரை | 14 |
| 1.9.2 கற்பனைத் திறன் | 14 |
| 1.9.3 எழுத்துத் திறன் | 15 |
| 1.9.4 ‘ADDIE’ மாதிரி | 16 |
| 1.10 முடிவுரை | 17 |
| **இயல் 2 ஆய்விலக்கிய மீள்நோக்கு** | |
| 2.1 முன்னுரை | 18 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



2.2 ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பின் விவாதம் 19

2.3 முந்தைய ஆய்வுகள் 21

2.3.1 கற்பனைத் திறன் 21

2.3.2 கட்டுரை எழுதும் திறன் 24

2.3.3 ADDIE Model/ மாதிரி 27

2.4 முடிவுரை 30

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 31

3.2 ஆய்வு வடிவமைப்பு 32

3.2.1 மீட்டுணர்தல் (முன்னறித் தேர்வு) 33

3.2.2 திட்டமிடுதல் 34

3.2.3 செயல்படுத்துதல் 35

3.2.4 உற்றுநோக்குதல் 36

3.2.5 மீட்டுணர்தல் (பின்னறித் தேர்வு) 36

3.3 ஆய்வு வடிவமைப்பின் வரைபடம் 37

3.4 ஆய்வுக் கட்டமைப்பு 39

3.5 ஆய்வு அணுகுமுறை 40

3.6 ஆய்வு தரவாளர்கள் 40

3.7 ஆய்வுக் கருவி 41

3.8 தரவு சேகரிப்பு முறை 42

3.9 தரவு பகுப்பாய்வு முறை 43

3.10 ஆய்வுக் கோட்பாடு 44

3.11 ஆய்வுக் கோட்பாடு படவரைவு 46

3.12 முடிவுரை 46

**இயல் 4 தரவு பகுப்பாய்வு**

4.1 முன்னுரை 48

4.2 நோக்கம் 1 49

4.2.1 மாணவர்களின் அரையாண்டு தேர்வு & கற்பனைக் கட்டுரைப் புள்ளிகள் 49

4.3 நோக்கம் 2 51

4.3.1 ஆய்வுக்கு முன் மாணவர்களுக்கு வழங்கிய வினாநிரல் பட்டியலின் முடிவுகள் 51


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.3.2 ஆய்வுக்கு முன் மாணவர்களின் கற்பனைக் கட்டுரைக் குறித்த ஆசிரியரின் நேர்காணல் முடிவுகள் 55

4.4 முன்னறித் தேர்வின் முடிவுகள் 57
4.4.1 முன்னறித் தேர்வின் வழி அடையாளம் காணப்பட்ட மாணவர்களின் சிக்கல்கள் 59

4.5 நோக்கம் 3 61
4.5.1 'ADDIE' மாதிரியை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் 62
4.5.2 மாணவர்களின் உற்றுநோக்கல் முடிவுகள் 63
4.5.3 நடவடிக்கையின் மதிப்பிட்டுப் புள்ளிகள் 65
4.5.4 பின்னறித் தேர்வு முடிவுகள் 68
4.5.5 முன்னறித் தேர்வு & பின்னறித் தேர்வு ஒப்பீடு 69
4.6 முடிவுரை 71

**இயல் 5 ஆய்வு கண்டுபிடிப்பு**
5.1 முன்னுரை 72
5.2 ஆய்வு முடிவுகள் 72
5.2.1 இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுத்துத் திறனில் அடைவுநிலையை பகுப்பாய்வு செய்தல் 73

5.2.2 இரண்டாம் படிவ மாணவர்கள் கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனில் எதிர்நோக்கும் சிக்கல்களைப் பகுப்பாய்தல் 74

5.2.3 இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனை ADDIE மாதிரி வழி மேம்படுத்துதல் 78

5.3 தொடராய்வுக்கான பரிந்துரை 83
5.4 முடிவுரை 85
**துணைநூற்பட்டியல்** 87
**பின்னிணைப்பு** 92

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

மலேசிய இடைநிலைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் எழுத்துத் திறனானது முக்கிய பங்கைப் பெற்றுள்ளது. அவற்றில் எழுத்துத் திறனைப் போலவே கேட்டல், பேச்சு, வாசிப்பு போன்ற திறன்களும் முதன்மைக் கூறுகளாகவும் அமைகின்றன. எழுத்துத் திறன் என்பது கல்வி அடிப்படையில் எழுத்துத் திறன் வழி கற்றல் கற்பித்தலில் நிகழ்வதைக் குறிப்பு எடுத்தல், அனுபவங்களைத் தொகுத்தல், கருத்து விளங்க எழுதுதல் போன்றவற்றை மலேசிய கல்வி அமைச்சு (KPM) வரையறைத்துள்ளனர் (முத்துக்கிருஷ்ணன், 2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மொழி சார்ந்த அனைத்துப் பாடங்களிலும் கட்டாயம் எழுத்துத் திறனானது மாணவர்களியையே அமல்படுத்தியதோடு அதனை மேம்படுத்துவது அவசியம். அவ்வாறு மேம்படுத்தினால் மட்டுமே மாணவர்களால் இலக்கண பிழையின்றியும் ஒரு மொழியின் சொல் வளத்தை முழுமையாக அடைய முடியும் (Regina Borsellino, 2022). மேலும், எழுத்துத் திறனானது ஒரு மனிதனின் சிந்தனை ஆற்றலை, தகவல் சேகரிக்கும் திறமை, உணர்வுகளை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வெளிப்படுத்துதல், செயலில் ஈடுபடும் பக்குவம் ஆகியவற்றை மேலோங்க செய்ய இயலும். அவ்வாறு செய்வதின் வழி ஒரு மனிதனைச் சிறந்த எழுத்தாளராகவும் உருவாக்கலாம் (Dan Shewan, 2021).

தொடர்பாடலின் வழியே எழுத்துத் திறன் அறிமுகம் செய்யப்பட்டதால் ஒருவர் பேசுவதைப் போலவே கூற விளையும் கருத்துக்களைத் தெளிவாகவும் திறன்படவும் தொகுத்து எழுதும் ஆற்றல் ஒரு மாணவனுக்குப் பொதுவாகவே உண்டு என்பதால் அம்மாணவனின் எழுத்தும் திறனை மேம்படுத்தினாலே அவற்றில் வலுமைப் பெற முடியும் (David R. Olson, 2020).

மேற்காணும் ஆங்கிலேய ஆய்வாளர்களின் கூற்றின் படி, மலேசியாவில் இன்றைய காலக்கட்டத்தில் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே எழுத்துத் திறனானது குன்றி இருப்பதைக் காண முடிகிறது. மாணவர்கள் கட்டுரையில் கருத்துகளை பட்டியலிட்டு அதனை முறையாக எழுதுவதில் சிக்கல்களை எதிர்நோக்கின்றனர் (லோகேஸ்வரி மதிவாணம், 2021). அவ்வகையில், அச்சிக்களைக் களைய ஆய்வாளர் இவ்வாய்வை மேற்கொள்கிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதோடு, இன்றைய கற்றல் கற்பித்தல் சூழலில் இடைநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எழுத்துத் திறனும் குன்றியிருப்பதோடு தமிழ் ஆசிரியர்களின் உயர்தர சிந்தனைத் திறனில் சற்றுப் பின்தங்கிய நிலையில் இருப்பதினால் மாணவர்களுக்கு முறையாகக் கற்பிக்கும் ஆற்றலை மேம்படுத்துவதோடு சரியான அணுகுமுறையும் தேர்ந்தெடுத்துக் கற்பிக்கும் திறனும் குறைந்த வண்ணமே காணப்படுகிறது என்பதை ஓர் ஆய்வின் வழி எடுத்துரைக்கப்படுகிறது (Rathneswary Rajendran, 2020). இதனால், மாணவர்களின் எழுத்துத் திறனும் ஒரு வகையில் பாதிப்படைக்கிறது. இதுவும் இன்றைய பெரும்பாலான பள்ளிகளில் ஒரு சிக்கலாக அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அதுமட்டுமின்றி, இடைநிலைப் பள்ளிகளைத் தவிர்த்து ஆரம்ப பள்ளிகளிலேயே 30% முதல் 60% வரையிலான நேரம் எழுத்துத் திறனில் மாணவர்கள் செலவிட்டாலும் அக்காலக்கட்டத்திலேயே அவர்கள் சற்றுப் பின்தங்கிய அடைவு நிலையில் இருக்கிறார்கள். இதே சூழலோடு மாணவர்கள் இடைநிலைப்பள்ளிக்கு வரும் பொழுது இன்னும் சற்று அதிகமாகவே தடுமாறுகிறார்கள் என்பதை ஆய்வு ஒன்று எடுத்துரைக்கிறது (Chitra Selvi Rudrapathy, Thulasi Rudrapathy, Maniyarasan Muniandy, 2022). இதுவும் மாணவர்கள் எழுத்துத் திறனில் பிந்தங்கிருக்க காரணமாக அமைகிறது.

ஆகவே, இவ்வாய்வு முழுவதும் எழுத்துத் திறனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் ஆற்றலை மேம்படுத்துவதாகும். ‘ADDIE’ மாதிரியின் வழி எழுத்துத் திறனை மேம்படுத்த முடியும் என்பதைச் சான்றுப்படுத்தவே இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**1.2 ஆய்வுப் பின்னனி**

மலேசியா நாட்டிற்கு 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் தமிழ்நாட்டிலிருந்து மலாயாவிற்குத் தமிழர்களைக் கூலிகளாகக் கொண்டு வரப்பட்டதான் வழி தமிழ்க்கல்வியானது நாடெங்கும் பரவியது. அவர்களிடமிருந்தே தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சியடைந்து இன்று வரையிலும் பள்ளிகளில் போதிக்கப்படுகிறது (பாஸ்கரன் சுப்பிரமணியம், 2020).

மலேசியாவில் முதன் முதலில் தமிழ்மொழிக் கல்வி 1816-ஆம் ஆண்டில் பினாங்கு இலவசப் பள்ளியில் (Penang Free School) தொடங்கியது. இப்பள்ளி Rev.Hutchings என்பவரால் பினாங்கு மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்டது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


(பாஸ்கரன் சுப்பிரமணியம், 2020). தொடர்ந்து, தமிழ்மொழியின் வளர்ச்சியினால் பல இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி பாடமானது போதிக்க தொடங்கியது. அப்பொழுதே கல்விப் பாடத்திட்டம் எனப்படும் பல்வேறு திறன்களில் கல்வி அமைச்சு உருவாக்கப்படுள்ளன. அதனையே இன்றளவும் பயன்படுத்தினாலும் சில கூறுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில், மலேசிய கல்வி திட்டத்தின் அடிப்படையில் பார்த்தோமானால் பாட கலைத்திட்டத்தில் (DKSP) இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு தர அடிப்படையிலான பாட திட்டங்களும் (KSSM) ஒருங்கிணைக்கப்பட்ட பாட திட்டங்களும் (KBSM) மலேசிய கல்வி அமைச்சு (KPM) வரையரைத்துள்ளது. அவற்றில் முதல் நான்கு திறன்களுக்கு முக்கியத்துவத்தை அளித்துள்ளனர். அவை, கேட்டல், பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்துத் திறனாகும். இவை நான்கு திறனும் இடைநிலைப்பள்ளிகளில் இன்றளவும் கட்டாய நிபந்தனைகளாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதனால், இடைநிலைப்பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கட்டுரை எழுதும் திறனிலேயே அதிகம் முன்னுரிமை வழங்கி வருகின்றனர். அவ்வாறு மாணவர்களுக்கு எழுத்துத் திறனைச் சார்ந்த பல்வேறு பயிற்சிகளையும் புதிய கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளையும் வகுப்பில் பயன்படுத்துகின்றனர் (Shalini, 2018). கற்பனை என்பது ஒரு தனிநபரின் எண்ணங்களிருந்து உருவாக்கப்படும் காட்சிகள் அல்லது மன செயல்படுகளாகும். அதாவது, இவற்றை கனவு, கற்பனை பிம்பம், காட்சிப்படுத்துதல் என்றும் அழைக்கலாம். இக்கற்பனைத் திறனானது அறிவாற்றல், முன்னறிவிப்பு, புரிதல், பாதுகாப்பு, சுய வளர்ச்சி மற்றும் நினைவுகள் போன்ற செயல்பாடுகளுக்கு உதவியாகவே அமைகிறது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


(Travelercoffee, 2012). மேலும், இந்தக் கற்பனைத் திறனை ஆங்கிலத்தில் பல்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, *'Effectuative imagination, Intellectual or constructive imagination, Imaginative fantasy, Empathy, Strategic imagination, Emotional imagination, Dreams and Memory Reconstruction'* ஆகியவை உள்ளடங்கும். இவற்றை எழுத்துத் திறனிலும் ஒன்றிணைத்தும் எழுதலாம். அதாவது, இவ்வாறு வகைப்படுத்தப்பட்டக் கற்பனைத் திறன்களை அடிப்படையாகக் கொண்டு கற்பனைக் கட்டுரை எழுதுவதிலும் பயன்படுத்திப் பல தரப்பட்ட கட்டுரைகளையும் உருவாக்கலாம் (Argumentative Penguin, 2018). எனவே, இதனைப் பயன்படுத்துவதன் வழி கற்பனைக் கட்டுரையின் தரத்தையும் நேர்தியான முறையையும் மேம்படுத்த வழி வகுக்கும்.

சாதாரண கட்டுரைக்கும் கற்பனைக் கட்டுரைக்கும் பல்வேறு கூறுகளின் படி வேறுபடுகிறது. அதாவது, இல்லாததை இருப்பதாகத் தனக்குள் நினைத்துக் கொண்டு அதனை வர்ணித்தும் உயிர் கொடுத்தும் மிகைப்படுத்திக் கூறுவதாகும். ஆனால், சாதாரண கட்டுரையானது அவ்வாறு மிகைப்படுத்திக் கூறாமல் இருப்பதைச் சான்றுபடுத்திக் கூறுவதாக அமைகிறது இந்த கற்பனைக் கட்டுரையில் ஒருவரின் அறிவாற்றல், முன்னறிவிப்பு, புரிதல், பாதுகாப்பு, சுய வளர்ச்சி, நினைவுகள் ஆகிய கூறுகளை மேம்பட இவை துணையாக விளங்குகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்கற்பனைக் கட்டுரையின் வடிவமானது மாணவர்கள் எழுதக்கூடிய ஒரு நீண்ட கட்டுரை அமைப்பிலேயே அமைகிறது. அதாவது, கற்பனைச் சார்ந்த தலைப்பையொட்டிய முன்னுரை, கருத்துகள், எடுத்துக்காட்டுகள், முடிவுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆகிய கூறுகள் கண்டிப்பாக இவற்றில் காணப்படும். இந்த கற்பனைக் கட்டுரையின் பக்க அளவு அல்லது சொற்கள் கணக்கிற்கு எந்த ஒரு கட்டுப்பாடுகள் இல்லை. ஆனால், இவை பள்ளி மாணவர்களைக் குறிக்கும் பொழுது கல்வி அமைச்சு (KPM) வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கொண்டே கற்பனைக் கட்டுரை எழுத வேண்டும். அவை, 160 சொற்களுக்குள் அமைவதோடு குறைந்தது இரண்டு பக்க அளவில் அமைய வேண்டும். (Laven, 2020). அதுமட்டுமின்றி, நல்ல சொற்களஞ்சியத்துடன் ஏற்புடைய படிவம் ஒன்று முதல் இரண்டு வரை கற்ற மொழியணிகளைக் கொண்டும் நேர்த்தியாக எழுத வேண்டும். இவ்வாறான கற்பனைக் கட்டுரையை முறைப்படி எழுதுவதில் மாணவர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை முன் நிறுத்தவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆகவே, கற்பனைத் திறன் மற்றும் கட்டுரை எழுதும் திறனைக் குறித்த பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தாலும் கற்பனைத் திறனில் உள்ளடக்கப்பட்டுள்ள கற்பனை வகைகளைக் கொண்டு ADDIE மாதிரியுடன் சேர்ந்து கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்தும் ஆய்வுகள் தமிழ் மொழியில் பெரும்பாலும் இல்லை என்பதால் ஆய்வாளர் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.3 ஆய்வுச் சிக்கல்

இடைநிலைப்பள்ளி மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுத்துவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பது ஆய்வாளர் மேற்கொண்டுள்ள ஆய்வில் தெரிய வருகிறது. அதுமட்டுமில்லாமல் முந்தைய ஆய்வுகளிலும் எழுத்துத் திறனில் ஏற்படும் சிக்கல்களை எடுத்துரைக்கப்படுகிறது. இரண்டாம் படிவ மாணவர்களுக்கு தமிழ் மொழி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாடம் கற்றல் கற்பித்தல் நிகழும் பொழுது பாட கலைத்திட்டத்தில் (DKSP) வரையரைக்கப்பட்டிருக்கும் அனைத்துத் திறன்களும் கற்பிக்கப்படுகின்றது. அவற்றில் பெரும்பாலும் மாணவர்களின் எழுத்துத் திறனை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அவ்வகையில், எழுத்துத் திறனில் மாணவர்களுக்குக் கற்பனைக் கட்டுரை எழுதும் அணுகுமுறைகளும் கற்பிக்கப்பட்டுள்ளது.

கற்றல் கற்பித்தலின் போது ஆய்வாளரால் மாணவர்களிடையே ஏற்படும் பல்வேறு சிக்கல்களை அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை, மாணவர்களிடம் கற்பனைத் திறனைப் பற்றிய புரிதலும் தகவல்களும் குறைந்தே காணப்படுவதால் அவர்களின் ஆளுமையும் குறைந்துள்ளது (அமலோர், 2014). அதாவது, மாணவர்கள் ஈர்க்கும் வகையிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கற்பனைக் கட்டுரையைப் பெரும்பாலானோர் எழுத தவறியுள்ளனர். ஏனெனில், மாணவர்களுக்குக் கற்பனைத் திறனைக் குறித்த விளக்கமும் புரிதலும் முழுமையாகக் கொண்டு சேர்க்காமல் இருபதினாலும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கமானது குறைந்தே காணப்படுவதினாலும் அவர்களின் கற்பனைத் திறனிலும் பின் தங்கியே காணப்படுகின்றனர் (Raja Segaran, 2014). இதுவும் ஒரு சிக்கலாகக் கருதப்படுகிறது.

மேலும், மாணவர்கள் நேர்தியான கதையை வடிவமைக்க தெரியாமலேயே இருப்பதைக் கண்டறியப்பட்டது. அவை, மாணவர்களுக்கு ஒரு முறையான கூறுகளைச் சார்ந்த கற்பனைக் கட்டுரையை நேர்த்தியுடனும் கோர்வையுடனும் எழுத சிரமம்படுகின்றனர். மாணவர்களுக்குக் கற்பனைக் கதையை நன்கு தெரிந்துருந்தாலும் அவர்களுக்கு ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு எழுத இயலவில்லை. இதனால் மாணவர்களுக்குக் கற்பனைக் கட்டுரையைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கோர்வையாகத் தொகுத்து எழுத அதிகமான சிக்கலை எதிர் நோக்குகின்றார்கள் (Justin Jeevaprakash, 2013). எனவே, இந்த கட்டுரை எழுதும் திறனைச் சோதிக்கும் வகையில் அனைத்துப் படிவ மாணவர்களுக்குத் தேர்வுகளில் கட்டுரை எழுதுவதற்காக தேர்வு தாள் ஒன்று என பிரிக்கபட்டுள்ளது (முத்துக்குமார், 2017).

இரண்டாம் படிவ மாணவர்களுக்குக் கருத்துக்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் தொகுத்து எழுதுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். அதாவது, கூற விளையும் கருத்துகளைத் தெளிவாக அதற்கேற்ற எடுத்துக்காட்டுகளுடன் விளக்கமாக எழுத தவறுகின்றனர். அதோடு, மாணவர்கள் கருத்துகளையும் சரியாகத் தொடர்ப்புப்படுத்துவதிலும் பெரும்பாலானோர் சிக்கலையே எதிர்கொள்கின்றனர். அவை, மாணவர்கள் எழுதும் ஒவ்வொரு கருத்துகளும் பிற கருத்துகளோடு வகைப்படுத்தி முறையாக எழுத இயலவில்லை என்பதேயாகும். இவ்வாறான சிக்கல் மாணவர்களுக்கு ஏற்படும் காரணம் அவர்களின் பொது அறிவு ஆற்றலும் குறைவாகவே இருப்பதினால் மாணவர்களின் கருத்து எழுதும் திறனும் அடிப்படை நிலையில் உள்ளது (Kori Morgan, 2018).

மாணவர்களுக்கு சிறப்பான சொல்வளத்தையும் சொற்களஞ்சியத்தையும் பயன்படுத்தாமல் இருப்பதும் ஒரு வகை சிக்கலாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, பெரும்பாலான மாணவர்களுக்குச் சரியான சொற்களைப் பயன்படுத்திக் கட்டுரையை வடிவமைப்பதிலும் உயர்தர தமிழ் சொற்களைப் பயன்படுத்தி எழுவதிலும் தடுமாற்றத்தை எதிர்நோக்குகின்றனர். வாசிப்புப் பழக்கம் குறைவாக இருப்பதால் மாணவர்களிடையே இது போன்ற சிக்கல்கள் அதிகம் ஏற்படுகின்றன (Ashrafiany, Hasanuddin, Nonny Basalama, 2019).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொடர்ந்து, மாணவர்களுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளும் தகுந்த மொழியணிகளையும் பயன்படுத்தாமல் இருப்பது. அதாவது, மாணவர்களுக்கு ஏற்புடைய கருத்து விளங்க உதாரணங்களையும் இரட்டைக்கிழவி, உவமைத்தொடர், பழமொழி, திருக்குறள் போன்றவற்றை இணைத்து எழுதவும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் (முத்துக்குமார், 2017).

இவ்வாறான சிக்கல்களைக் களைய ADDIE மாதிரி வழி கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனை மேம்படுத்துதல் எனும் தலைப்பைக் கொண்ட இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.4 ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

i. இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுத்துத் திறனின் அடைவு நிலையைப் பகுப்பாய்வு செய்தல்.
ii. இரண்டாம் படிவ மாணவர்கள் கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனில் எதிர் நோக்கும் சிக்கல்களைப் பகுத்தாய்தல்.
iii. இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனை ADDIE மாதிரி வழி மேம்படுத்துதல்.

## 1.5 ஆய்வு வினா

i. இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுத்துத் திறனின் அடைவு நிலை எவ்வாறு உள்ளது?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ii. இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனில் எதிர் நோக்கும் சிக்கல்கள் யாவை?

iii. இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரையில் எழுத்துத் திறனை ADDIE மாதிரி வழி எவ்வாறு மேம்படுத்தப்படுகிறது?

**1.6 ஆய்வு நன்மைகள்**

இவ்வாய்வானது ஆய்வாளருக்கும் மட்டுமே பயனளிக்காமல் எழுத்துத் திறனையும் ADDIE மாதிரியையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது.

**1.6.1 ஆசிரியர்கள்**

இவ்வாய்வானது ஆசிரியர்களுக்குப் பெரும் உதவியாக அமையும். குறிப்பாக எழுத்துத் திறனில் ஆசிரியர்கள் தங்களது பாடத்தில் ADDIE மாதிரியைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை நிகழ்த்துவதன் வழி மாணவர்களின் எழுத்து ஆற்றலை எளிதாகவே மேம்படுத்தலாம். இதனைக் கொண்டு மாணவர்களிடையே ஏற்படும் எழுத்துத் திறன் சார்ந்த சிக்கல்களை அடையாளப்படுத்தவும் துணை புரியும். இவ்வாய்வில் எடுத்துரைக்கப்பட்ட ADDIE அணுகுமுறையை வகுப்பிலும் ஆசிரியர்கள் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்ப்பதோடு அவர்களின் எழுத்துத் திறனையும் மேம்படுத்த முடியும். ஆசிரியர்களுக்கு வகுப்பறையில் எவ்வாறு மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும் என தெளிவும் ஆசிரியர்களுக்கு இவ்வாய்வின் வழி ஏற்படும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.6.2 மாணவர்கள்

இவ்வாய்வில் பயன்படுத்தப்படும் ADDIE மாதிரியின் வழி மாணவர்கள் தங்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்திக் கொள்ள உதவியாகவே அமையும். இம்மாதிரியானது மாணவர்கள் கற்பனைக் கட்டுரையை நேர்த்தியாகத் தொகுத்து எழுத துணை புரியும். இந்த மாதிரியைப் பின்பற்று கற்பனைக் கட்டுரையைப் படைக்கும் பொழுது மாணவர்கள் சுயமாகவே கற்கும் ஆற்றலையும் தங்களது சிக்களையும் அடையாளம் காணவும் வழி வகுக்கும். மாணவர்களும் ஆர்வத்துடனும் தெளிவுடனும் கட்டுரை எழுதும் நுணுக்கங்களையும் அணுகுமுறைகளையும் கற்று அறிந்து கொள்ள இம்மாதிரி துணை புரியும்.

### 1.6.3 சமுதாயம்

இவ்வாய்வானது பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு மட்டும் உதவியாக அமையாமல் கல்வி அமைச்சு வரையறுக்கப்பட்டிருக்கும் கலைத்திட்டத்திற்கும் துணைப் புரியும். இவ்வாய்வின் முடிவுகள் கல்வி அமைச்சால் வரையறுக்கப்பட்டிருக்கும் கற்றல் கற்பித்தல் கோட்பாட்டினுள் இந்த ADDIE மாதிரியையும் உட்படுத்திக் கொள்ள வழிக்காட்டியாக அமையும். இவ்வாய்வின் வழி மாணவர்கள் தங்களது எழுத்துத் திறனை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் எதிர் காலத்தில் அவர்கள் சிறந்த எழுத்தாளராக உருவாக முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு மூன்று நோக்கங்களை மையப்படுத்தியே ஆராய்யப்படுவதோடு இரண்டாம் படிவ மாணவர்களுக்கு முறையாகக் கட்டுரை எழுவதில் தடுமாற்றம் அடைவதால் அதனைக் களையும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் ADDIE மாதிரி எனும் கற்றல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கற்பித்தல் கோட்பாட்டைப் பயன்படுத்தி இரண்டாம் படிவ மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்தப்பட்டது. இவற்றில் ADDIE மாதிரியின் அணுகுமுறையாகக் காணொளி, விளையாட்டு முறை, படங்கள், I-Think வரைபடம், அட்டவணை, கட்டுரை கட்டமைப்புப் போன்ற உடகங்கள் பயன்படுத்தப்பட்டது.

மேலும், இவ்வாய்வின் ஆய்வுப் பொருள்களாகக் கற்பனைத் திறன், எழுத்துத் திறன், ADDIE மாதிரி அமைகிறது. தமிழ்மொழி கலைதிட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நான்கு திறன்களில் முக்கியமான திறனாகக் கருதப்படுவது எழுத்துத் திறன் என்பதால் ஆய்வாளர் இத்திறனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளப்பட்டது. படிவம் இரண்டின் காலத்திட்டத்தில் கல்வி அமைச்சு வழங்கப்பட்டதைக் கொண்டு கற்பனைக் கட்டுரைக் கற்பிக்கப்படுவதால் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட ADDIE மாதிரி கோட்பாடு மாணவர்களின் எழுத்துத் திறனை எளிதாகவே மேம்படுத்த இயலும் என்பதினால் இவ்வாய்வில் ADDIE மாதிரிப் பயன்படுத்தப்பட்டது. இம்மாதிரி கட்டுரை எழுதும் முறையைப் படிப்படியாகக் கொண்டு செல்வதாலும் மாணவர்களுக்குத் தெளிவான புரிதுணர்வு ஏற்படும் என்பதானாலும் அவை மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதினாலும் இந்த ADDIE மாதிரிக் கையாளப்பட்டது.

மேலும், பினாங்கு மாநிலத்தில் *பாயான் லெபஸ்* பகுதியிலுள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் இவ்வாய்வு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் படிவம் இரண்டில் ஏழு மாணவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவ்வாய்வு எட்டு வாரம் எனப்படுவது 8 ஆகஸ்ட் 2022 முதல் 7 அக்டோபர் வரை நடத்தப்பட்டது.

### 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

இவ்வாய்வை மேற்கொள்ள ஆய்வாளர் பல வகையான ஆய்விற்குத் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், இணையத் தளங்கள், ஆய்வு ஆவணங்கள் போன்ற ஊடகங்கலிருந்து பெறப்பட்டு அதனை எடுத்துக்காட்டாக முன் நிறுத்தியே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. முதன்மைச் சான்றாதாரத்தில் கட்டுரை எழுதும் திறனைக் குறித்தும் கற்பனைத் திறனைக் குறித்தும் தகவல்களையும் தரவுகளையும் கட்டுரை மற்றும் ஆய்வேடுகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, துணைமைச் சான்றாதாரத்தில் 'ADDIE' மாதிரியைக் குறித்த பல்வேறு தகவல்களை ஆங்கிலேயரின் உரைகள், ஆய்வு ஆவணங்கள் மற்றும் இணையத் தளத்திலிருந்து எடுக்கப்படுள்ளது. இவ்வாய்வின் வடிவமைப்பையும் உட்கூறுகளையும் கண்டறிந்து தெரிந்து கொள்ள ஆய்வாளர் அருள்நாதன் விசுவாசம் 2019-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆய்வுகள் எழுதும் முறையைச் சார்ந்த புத்தகத்தின் துணைக் கொண்டு இந்த ஆய்வு எழுதப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9 கலைச்சொல் விளக்கம்

இவ்வாய்வில் ஒவ்வொரு கூறுகளையும் உடகங்களையும் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வகையில், இவ்வாய்வைச் சார்ந்த ஒவ்வொரு சொற்களுக்கும் தெளிவான விளக்கத்தையே அளிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.1 கற்பனைக் கட்டுரை

DKSP எனப்படும் கல்வி கலைத்திட்டத்தில் படிவம் இரண்டின் அடிப்படையில் எழுத்துத் திறனில் 3.4 பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைப்பர் எனும் உள்ளடக்கத் தரத்தின் கீழ் 3.4.13 160 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர் எனும் கற்றல் தரம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வில் கற்பனைக் கட்டுரை ஆய்வாளரால் கையாளப்படுள்ளது (DKSP FORM 2, 2016). கற்பனைக் கட்டுரை என்பது தனது கற்பனைத் திறனைப் பயன்படுத்தியும் எதிர்காலச் சூழலை மையமாகக் கொண்டும் கட்டுரையாகக் கருத்துக்களைத் தொகுத்து எழுதுதலாகும். (முனியாண்டி ராஜ், 2015). அதாவது, குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி, ஒரு கட்டுக்கோப்புடன் யாவரையும் ஈர்க்கும் முறையில் அமைக்கப்படுவதே கற்பனைக் கட்டுரை எனப்படுகிறது (Srimist Education, 2004). கற்பனைக் கட்டுரையானது ஒருவரின் உயர் தர சிந்தனைத் திறனை வளப்படுத்தச் செய்து அவ்வாறு துலங்க வைக்க வழி வகுக்கும். (பாலமுருகன், 2016). ஆகையால், கற்பனைக் கட்டுரையானது எழுத்துப் படிவத்தைச் சார்ந்த ஒரு வகை நீண்ட கருத்துப் பத்திகளாகத் தொகுத்து உயர்தர சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 கற்பனைத் திறன்

மலேசிய கல்வி அமைச்சு (KPM) வரையறுக்கப்பட்டிருந்த எழுத்துத் திறனைச் சார்ந்த கூறுகளில் கற்பனைத் திறனும் உள்ளடங்கும். படிவ இரண்டிற்கான DKSP-யில் எழுத்துத் திறன் பகுதியில் கற்பனைக் கட்டுரைக் கொண்டுள்ளது. இந்த கற்பனைக் கட்டுரையானது மாணவர்களின் கற்பனைத் திறனை மேம்படுத்தும் வகையிலும் அமைதுள்ளது. கற்பனைத் திறன் என்பது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஒரு தனிநபரின் எண்ணங்களிருந்து உருவாக்கப்படும் காட்சிகள் அல்லது மன செயல்படுகளாகும். அதாவது, இவற்றை கனவு, கற்பனை பிம்பம், காட்சிப்படுத்துதல் என்றும் அழைக்கலாம். இக்கற்பனைத் திறனானது அறிவாற்றல், முன்னறிவிப்பு, புரிதல், பாதுகாப்பு, சுய வளர்ச்சி மற்றும் நினைவுகள் போன்ற செயல்பாடுகளுக்கு உதவியாகவே அமைகிறது. (Travelercoffee, 2012). மேலும், இந்த கற்பனைத் திறனை ஆங்கிலத்தில் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, *‘Effectuative imagination, Intellectual or constructive imagination, Imaginative fantasy, Empathy, Strategic imagination, Emotional imagination, Dreams and Memory Reconstruction’* எனும் எட்டுப் பிரிவுகள் உள்ளடங்கும். (Argumentative Penguin, 2018). ஆகையால், கற்பனைத் திறன் எனப்படுவது ஒருவரின் உயர்தர சிந்தனை ஆற்றலைப் பயன்படுத்தித் தனது எண்ணங்களிருந்தோ கற்பனையிலிருந்தோ தானாக உதிக்கும் காட்சியாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.3 எழுத்துத் திறன்

மலேசிய தமிழ்மொழி கலைதிட்டத்தில் எழுத்துத் திறனுக்கு அதிக முன்னுரிமை மாணவர்களுக்கு வழங்கப்படுவதோடு அதனை மேம்படுத்தும் வகையில் கற்றல் கற்பித்தலிலும் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். (DKSP FORM 2, 2016). எழுத்துத் திறன் என்பது பிறருடன் தெளிவாகத் தொடர்புக் கொள்ளவும் அதனின் வழி கூற வரும் கருத்து எழுத்துப் படிவத்தில் சென்றடைய வேண்டும் என்பதேயாகும். அதாவது, சொற்களின் மூலம் கருத்துகளை வெளிப்படுத்துவதைச் சிந்தனைத் திறனையும் அறிவாற்றலையும் பயன்படுத்தி எழுத்து முறையில் எழுதி வெளிப்படுத்தலாகும் (Indeed Editorial

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


Team, 2021). தொடர்ந்து, எழுத்து என்பது எங்கும் எதிலும் காண முடியும். எடுத்துக்காட்டாக, கேட்கும் ஒலியில், பார்க்கும் காணொளியில், வாசிக்கும் நாளிதலில், பேசும் மொழியில் கூட எழுத்தானது காணப்படுகிறது. அவ்வகையில், எழுத்துத் திறனை மேம்படுத்திக் கொள்வது சிறப்பையே அளிக்கும். (Crystalline Chatters-Bednault, 2019). ஆக, எழுத்துத் திறனானது கூற வரும் கருத்தைத் தெளிவாகக் கொண்டு சேர்க்கும் வகையில் எழுத்து மூலமாக ஒரு கருத்தை வெளிப்படுத்துவதாகும்.

### 1.9.4 'ADDIE' மாதிரி

ADDIE மாதிரி என்பது கற்றல் கற்பித்தல் கோட்பாடுகளில் ஒன்றாகவும் குறிப்பாக எழுத்துத் திறனை மேம்படுத்த செய்யும் ஓர் அணுகுமுறையாகும். இந்த ADDIE மாதிரியைப் பாரம்பரியக் கற்பித்தலிருந்து 21-ஆம் நூற்றாண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கற்றல் கற்பித்தலின் அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்பம் சார்ந்துள்ள கற்பித்தலை எடுத்துரைக்கிறது. (Richard Culatta, 2012). மேலும், இம்மாதிரியை 1980-ஆம் காலக்கட்டத்தில் Branson எனும் ஆங்கிலேயே ஆய்வளரால் 'Analysis, Design, Development, Implementation, Evaluate' எனும் ஐந்து படிநிலைகளோடு உருவாக்கியுள்ளார் (Serols, 2021). இந்த ADDIE மாதிரியைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்துவதினால் மாணவர்களின் எழுத்துத் திறனும் எளிதாகவே மேம்படுத்துவதோடு கட்டுரையின் அமைப்பையும் தெளிவாக அறிந்து கொள்வர். இந்த மாதிரியுள்ள படிநிலைகளும் இதையே வழியுறுத்துகிறது (Justin Ferriman, 2014). எனவே, 'ADDIE' மாதிரியானது கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் ஒரு வகை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கோட்பாடாக அமைவதோடு எழுத்துத் திறனை எளிதாகப் புரிந்து கொள்ளவும் இவை உதவியாகவே அமைகிறது.

### 1.10 முடிவுரை

இவ்வாய்வின் பற்றிய அறிமுகத்தை இவ்வியல் ஒன்று எடுத்துரைக்கிறது. ஆய்வாளர் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே கட்டுரை எழுதும் திறனில் ஏற்படும் சிக்கல்களையும் பின்னனியையும் இவைக் கொண்டுள்ளது. ஆய்வின் மூன்று நோக்கங்களோடு ஆய்வாளர் பயன்படுத்திய ஆய்வு சான்றதாரமாகிய ஆவணம், நூல்கள், ஆய்வேடுகள் போன்ற மூலத்தையும் கொண்டிருக்கிறது. இந்த இயல் ஒன்றில் ஆய்வின் முக்கியத்துவமாக ஆசிரியர்கள், மாணவர்கள், சமுதாயம் ஆகியோருக்கு ஏற்படும் நன்மைகளையும் பறைச்சாற்றப்பட்டுள்ளது. இவ்வாய்வானது குறிப்பிட்ட சில ஆய்வு எல்லை எனப்படும் சிக்கல், நோக்கம், மாதிரி, அணுகுமுறை, நேரம், பொருள், போன்றவற்றையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, இந்த ஆய்வில் மையமாகக் கொண்டு ஆராய்யப்படும் கூறுகளைக் கொண்டு கலைச்சொற்களாக விளக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi